# 21. பண்பாடுகள்

பண்பாடுகள் என்பது மனித சமுதாயத்தில் வேரூன்றிவிட்ட ஒன்று என்றாலும் இதனை பேணிக் காப்பது அரசின் முக்கிய கடமைகளில் ஒன்றாகும். நமது பராம்பரிய பண்பாடுகளை பேணிக் காக்கும் பொருட்டு, அரசாணை (நிலை) எண்.75, ஊரக வளர்ச்சி(சி1)த் துறை, நாள் 29.9.97-ல், (அ) தற்போது நலிந்த நிலையிலுள்ள சிறந்த கலைஞர்களுக்கு நிதியுதவி அளிக்கும் திட்டத்தினை மேற்பார்வையிடுதல், புதிய கலைப் பள்ளிகளுக்கு ஊக்கமளித்தல் போன்ற திட்டப்பணிகளை மேற்பார்வை செய்யவும், விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு நிதியுதவி செய்தல் மற்றும் உரிய தகுதிவாய்ந்த பயனாளிகளைக் கண்டறியும் பொறுப்புக்களை

கிராம ஊராட்சிகளுக்கும், (ஆ) கரந்தை தமிழ்ச் சங்கத்திற்கு உதவியளிக்கும் திட்டம், ஜவகர் சிறுவர் இல்லத்திற்கு உதவியளிக்கும் திட்டம், மாவட்ட கலைக் கூடங்களையும், கலை மன்றங்களையும் நிறுவும் திட்டம், இசைப் பள்ளிகளை நிறுவுதல் போன்ற திட்டப் பணிகளை ஆய்வு செய்யும் பொறுப்புக்கள் மாவட்ட ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. பண்பாடுகள் சார்ந்த திட்டப்பணிகளில் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட வேண்டிய அதிகாரங்கள் மற்றும் பொறுப்புக்கள் குறித்து கீழ்கண்ட இனங்களில் குழு பரிந்துரை செய்கிறது.

## கிராம ஊராட்சிகள்.

1. கிராமப்புறங்களில் நடைமுறையில் உள்ள விளையாட்டுகளை அடிக்கடி நடத்துவதோடு, திருவிழாக்களையும், அதோடு தொடர்புடைய பல்வேறு வகையான கலை நிகழ்ச்சிகளையும் நடத்த கிராம ஊராட்சிகள் ஆவன செய்தல்.
2. கிராம மக்களை அதிகம் கவரும் இசை, நாட்டுப்புறக் கலைக்குழுக்கள் மற்றும் நாடக / நடன பண்பாட்டுக் குழுக்களை ஏற்படுத்தி, அவற்றை முறையாக ஒருங்கிணைத்து, அதன் மூலம் மக்களிடையே போதுமான கல்வியறிவினையும் அதன் மூலம் விழிப்புணர்வையும் உருவாக்க கிராம ஊராட்சிகள் உதவுதல்.

3. சிறுகுடும்ப கோட்பாட்டின் இன்றியமையாமை, தேசிய ஒருமைப்பாடு மத நல்லிணக்கம், தீண்டாமை ஒழிப்பு, மது விலக்கு போன்றவற்றின் அவசியத்தை வலியிறுத்தி, நம் பண்பாட்டை உயர்ந்தோங்கிட நடவடிக்கைகள் எடுத்தல்.

4. தற்போது நலிந்த நிலையில் வாழும் சிறந்த கலைஞர்களைக் கண்டறிந்து, அரசின் நிதியுதவியை அவர்கள் பெறுவதற்கு ஏதுவாக விவரங்களைத் தொகுத்து, மாவட்ட ஊராட்சி மற்றும் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

5. விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு நிதியுதவி செய்தல், விளையாட்டு வளாகங்ககளை நிறுவுதல், திறமையான விளையாட்டு வீரர்களை கண்டறிந்து, சம்மந்தப்பட்ட விளையாட்டு அமைப்புகளுக்கு முறைப்படி

தெரிவித்து விளையாட்டுக்களைக் கற்றுக் கொடுக்க தேவையான பயிற்சிகளை ஏற்பாடு செய்ய சம்பந்தப்பட்ட மாவட்ட அளவிலான அலுவலருக்கு பரிந்துரைகள் செய்தல்.

## ஊராட்சி ஒன்றியங்கள்

1. கிராம ஊராட்சிகள் மற்றும் உள்ளூர் கலாச்சார நிறுவனங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் இவற்றின் உதவியுடன் கலாச்சார விழா மற்றும் விளையாட்டுப் போட்டிகள் போன்றவற்றை ஊராட்சி ஒன்றிய அளவில் திட்டமிட்டு தேவையான ஏற்பாடுகளை செய்தல்.

2. ஊராட்சி ஒன்றியங்கள், சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சிகளின் உதவியுடன் உள்ளூர் திருவிழாக்கள் நடத்த வேண்டிய ஏற்பாடுகளை செய்தல்.
3. விளையாட்டுக்களையும் கலாச்சார நடவடிக்கைகளையும் கிராம நிலையில் அபிவிருத்தி செய்ய சம்பந்தப்பட்ட அரசுத் துறைகளில் உள்ள நிபுணர்களின் அறிவுரைகளுடன் விளையாட்டு வளாகங்கள், நாடக சபாக்கள் போன்ற ஏனைய உள்ளமைப்புகளை நிறுவுவதற்குத் தேவையான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல்.

## மாவட்ட ஊராட்சிகள்

1. இயல் இசை நாடக மன்றம், ஓவிய பள்ளிகள் கலைக்குழுக்கள் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு ஆணைக்குழு இவைகளின் உதவியுடன் மாவட்டங்களில், ஓவியம் தீட்டுதல் இசை மற்றும் நாடகம் போன்ற போட்டிகள் நடத்துதல், விளையாட்டு பயிற்சி முகாம்கள், கண்காட்சிகள், பந்தயங்கள், குழுப்போட்டி விளையாட்டுகள், உள்ளூர் திருவிழர்க்கள் நடத்துதல், போன்ற நிகழ்ச்சிகளை மாவட்ட ஊராட்சி அளவில் ஏற்பாடு செய்யலாம்.மேற்படி நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கு வேண்டிய அனைத்து வழிகாட்டுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு கலைஞர்களை ஊக்குவித்து இதன் தொடர்பான சேவைகளை ஒருங்கிணைத்தல்.

2. கலைஞர்கள், கைவினைஞர்கள், விளையாட்டு வீரர்கள் போன்றவர்களை சிறப்பித்து பரிசளித்தல். மாவட்ட அளவில் ஐந்தாண்டிற்கு ஒருமுறை ஓர் சிறப்பு கருத்தரங்கு நடத்தி அதன் மூலம், மாவட்டத்தில் உள்ள அனைத்து

புராதன கலைகளான, வில்லுப்பாட்டு, மயிலாட்டம், கரகம், சிலம்பாட்டம், இசை, மற்றும் கிராமிய கலைகள் சார்ந்த சிறந்த கலைஞர்களின் முழு விவரங்களைத் தயாரித்து ஓர் பன்முகப் பட்டியலாக பராமரித்தல்.

3. மாவட்ட அளவில், இயல், இசை, நாடகம், ஓவியம், புராதன கலைகளின் கலைஞர்களைப் பற்றிய விவரப் பட்டியல் ஒன்றினை தயாரித்து பராமரித்தல்.

4. கிராம ஊராட்சி அளவில் விளையாட்டு போட்டிகள் நடத்தி அதன் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு, திட்டமிட்டு அதற்கு தேவையான அடிப்படை ஆதார வசதிகளை ஊராட்சி ஒன்றியங்கள் செய்து தருதல்.

5. தற்போது நலிந்த நிலையில் வாழும் சிறந்த கலைஞர்களுக்கு அரசின் நிதியுதவியை அவர்கள் பெறுவதற்கு ஏதுவாக விவரங்களை அரசுக்கு பரிந்துரை செய்தல்.
6. புதிய கலைப்பள்ளிகளுக்கு ஊக்கமளித்தல் மற்றும் அதனுள் சிறந்த கலைஞர்களைக் கண்டறிந்து, மேற்படி கலைகள் செம்மையாக அமைந்திட வழிவகைகள் செய்திடல்.

7. மாவட்டங்களில் உள்ள தடகளப் போட்டிகள், பிரபலாமான விளையாட்டுப் போட்டிகள் மற்றும் இதர விளையாட்டுகளைக் கண்டறிந்து அதனை ஊக்கப்பாடுத்தும் வகையில் சிறப்பு பயிற்சிகள் நடத்தி, விளையாட்டு - வீரர்களுக்கு பரிசுகள் வழங்கி ஊக்குவித்தல்.